# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு

## கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!










இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும் அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும் தலைமைக்கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று முன்தினம் (21.06.2025) கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட சமூக வலைத்தளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் சகோதரர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நேர்காணல் செய்தார். அவர்களின் சமூக வலைத்தளப் பக்கங்களைப் பார்வையிட்டுஅவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.




”ஓரணியில் தமிழ்நாடு கழக புதிய உறுப்பினர் சேர்க்கும் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழக உறுப்பினர் படிவங்களை கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி.,, மற்றும் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்களிடம் வழங்கி தொடங்கி வைத்தனர். அருகில் மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் இ.மணி உள்ளிட்டோர் உள்ளனர்.




அமெரிக்கா சென்றுள்ள வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கு சிக்காக்கோ விமான நிலையத்தில் தமிழ்ச் சங்கத்தினர் வரவேற்பளித்தனர்.



சென்னை, சைதாப்பேட்டையில் அமைந்துள்ள, எம்.சி.ராஜா அரசு மாணவர் விடுதியில் 20.06.2025 அன்று உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், விடுதியின் அறைகள் பராமரிப்பு மற்றும் சமையற் கூடத்தில், மாணவர்களுக்கு உணவு பாதுகாப்பாக தயாரித்து வழங்குவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை! பகுதிச் செயலாளர் கூ.பீ.ஜெயின் தலைமை!

# வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் “செம்மொழி நாள்” - மாபெரும் புகழரங்கம்!

### ஆசிரியர் கி.வீரமணி துவக்கி வைக்கிறார்! பேராசிரியர் கு.ஞானசம்பந்தம் - கவிஞர் சினேகன் புகழுரை!

*சென்னை, ஜூன். 23*

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் முன்னிட்டு செம்மொழி 20, தத்துவ பாதை அமைத்தவர்! சமத்துவ நீதி படைத்தவர்! எனும் தலைப்பில் நாளை (24.06.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில், வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளர், 8 வது மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப். மு.சுரேஷ்பாபு, வில்லிவாக்கம் மேற்கு பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் சிட்கோ சேகர், க.சுகுமாரன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ்.பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வில்லிவாக்கம் மேற்கு பகுதி, மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்.கோபாலகிருஷ்ணன், சிட்கோ ப.சுரேஷ்பாபு, ம.சுந்தர்எபி, கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா. தே.தீனதயாளன், க.மணிமாறன், எஸ்.கே.பி. தீபக்குமார், ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

புகழரங்கத்தை திராவிடர் கழகம் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி துவக்கி வைக்கிறார்.

பேராசிரியர் கு.ஞான சம்பந்தம், கவிஞர் சினேகன் புகழுரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் தலைவர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளர் ஓ.எ.நாகலிங்கம்,

கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதி இளம் சுருதி எம்.சி, வழக்கறிஞர் இந்திராஜித், காஞ்சி பாஸ்கர், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி,

சொ.வேலு எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, பா. ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா. கலைச்செல்வி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2), பாக உறுப்பினர்கள் (பி.எல்.சி) நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

94 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஆர்.தீனதயாளன், 95 வது வட்டக் கழகச் செயலாளர் மா.அகிலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.